Sri V. BALAKRISHNAN : தென்னாட்டு பாதரட்சையில் அழகையும் தரத்தையும் பார்த்து வடநாட்டார் மோகம் கொண்டிருக்கிறார்கள் என்பது மந்திரி அவர்களுக்கு தெரியுமா? வடநாட்டில் விற்பனை செய்வதற்கு போதிய பாதரட்சை கடைகளை மந்திரி அவர்கள் கூட்டுறவு முறையில் திறப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : மோகம் விஷயம் எனக்குத் தெரியாது. ஏதாவது குறிப்பாக கனம் அங்கத்தினர் தகவல் தந்தால் அவ்வாறு கடைகள் ஏற்படுத்தி நம்முடைய பாதரட்சையை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

Sri A. RATNAM ; சாத்தூர் சிவகாசியில் தீக்குச்சித் தொழிற்சாலையை சர்க்கார் ஆரம்பிப்பதற்கு ஆட்சேபனை தெரிவித்து மனுச் செய்துகொள்ளப் பட்டிருக்கிறது. மேலும், குடிசைத் தீக்குச்சித் தொழில் ஆரம்பிப்பதற்கு கடன் கேட்டிருக்கிறார்கள். மான்யம் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குப் போதிய மான்யமோ, கடனோ சர்க்கார் கொடுக்காமல் மறுத்திருக்கிறது. எனவே இது விஷயமாக பரிசீலனை செய்ய சர்க்கார் ஒரு கமிட்டியை அமைப்பார்களா? ஏன் அவசர அவசரமாக தீக்குச்சித் தொழிற்சாலையை சர்க்கார் ஆரம்பிக்க முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதெல்லாம் "**vested interest**" விஷயம். சிவகாசியில் தீக்குச்சித் தொழிற்சாலையில் ஈடுபட்டிருக்கிறவர்கள் தங்கள் தொழிலுக்கு போட்டியிருக்கக்கூடாது. வேறு எங்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கக்கூடாது என்று நினைக்கிறார்கள் குடிசைத்ரதெழில் என்று சொல்லிக்கொண்டு. அதே மாதிரிதான் நான் ஸ்வீடனில் இருநத பொழுது விம்கோ பாக்டரியில் அக்கறை கொண்டவர்கள் குடிசைக் கைத்தொழில் ஏன் ஆரம்பிக்கிறீர்கள்? என்று என்னைக் கேட்டார்கள்: சிவகாசியில் தொழிற்சாலை இருந்தால் அங்குள்ளவர்களுக்கு வேலை கிடைக்கிறது. சென்னையிலுள்ள ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு வேலை கிடைக்கும்படி வழி செய்வதற்குத்தான் சென்னையில் குடிசைத் தொழில் ஆரம்பிக்கப்பட்டது. மற்றபடி வசதிகள் கொடுக்கும் விஷயமாக அவ்வப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு எவ்வளவு தூரம் உதவி அளிக்கமுடியுமோ அவ்வளவு தூரம் உதவி அளிக்கப்படும்.

Relief to Harijans affected by seepage from the Lower Bhavani Project canal

* 390 *Q.*—**Sri K. R. NALLASIVAM :** Will the Hon. the Minister for Revenue be pleased to state with reference to the answer given to clause (*b*) of question No. 2674 on 21st November 1955—

(*a*) the number of houses for which Government aid was given in each taluk; and

(*b*) the number of new houses completed so far?

The Hon. Sri M. A. MANICKAVELU : The particulars are as follows :—

	Gobi Block.	Kodumudi Block.	Erode Block.	Total.
(*a*)	299	180	180	659
(*b*)	278	157	52	487

Sri K. T. RAJU : உதவி சபாநாயகர் அவர்களே! இந்த கீழ் பவானி ஆயக்கட்டு பிரதேசத்தில் இன்று இருக்கிற நிலைமையில் சமீபத்தில் பெய்த பெரு மழையினால் அங்குள்ள சேரிகள் வாழ்வதற்கு லாயக்கற்ற நிலைமையில் இருக்கின்றன. சமீபத்தில், ஜில்லா கலெக்டரும் டெவலப்மென்ட்

[21st December 1956

9–20 a.m. கலெக்டரும் அங்கு சென்று பல இடங்களை பார்த்தபோது அங்கு குடியிருக்க லாயக்கில்லை என்பதைத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். உடனடியாக அவர்களுக்கு வேறு வசதி செய்துதரவேண்டும். அங்குள்ள ஜனங்களுக்கு மேட்டுப்பாங்கான பிரதேசத்தில் மூன்று, நான்கு ஏக்கர்கள் கொடுத்து வசதி செய்ய சர்க்கார் நடவடிக்கைகள் எடுக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த நடவடிக்கைகளைப் பற்றி இப்பொழுதுதான் சொன்னேன். அதாவது, ஒவ்வொரு வீட்டிற்கும் 5 சென்ட் பிரகாரமும் 100 ரூபாய் வீடு கட்டுவதற்கு இனாமாகவும் 250 ரூபாய் கடனாகவும் கொடுக்கப்பட்டு இப்பொழுது 2,20,000 ரூபாய் செலவாகியிருக்கிறது. தாக்கவி லோன் ரூபாய் 1,53,000 கொடுக்கப் பட்டிருக்கிறது.

SRI B. K. NALLASWAMI : நீர் கசிவால் பாதிக்கப்பட்ட இந்த சேரிகளில் நில ஆர்ஜிதம் செய்வதற்கு வருடக்கணக்கில் தாமதம் ஏற்படுவதால் உடனடியாக நிலங்களை சர்க்கார் எடுத்துக்கொள்ள கலெக்டர் களுக்கு அதிகாரம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த "ஸீப்பேஜ்" விஷயத்தில், அது நன்றாக புரிந்த பிறகுதான் முடிவாக ஆர்ஜிதம் செய்யமுடியும்.

SRI N. K. PALANISAMY : May I know what steps the Government are proposing to take with regard to construction of houses for Harijans?

THE HON. SRI M. A. MANICKAVELU : I thought the hon. Member was listening to what I said.

SRI V. BALAKRISHNAN : இந்த 100 ரூபாய் ரொக்கமாக கொடுக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது சாமான் முறையில் கொடுக்கப் பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் ரொம்பவும் நுணுக்கமான கேள்வி கேட்கிறார், அந்த விஷயம் எனக்குத் தெரியாது.

SRI M. P. SUBRAMANIAM : சர்க்கார் துணை கொண்டு கீழ் பவானி வட்டாரத்தில் கட்டப்பட்ட வீடுகளில் 80 வீடுகளுக்கு மேல் இடிந்து விழுந் திருக்கிறது என்று புகார் வந்திருக்கிறது. இதன் மேல் சர்க்கார் என்ன நடவடிக்கைகள் எடுத்து இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : எனக்குத் தெரிந்த வரை யில் புகார் ஒன்றுமில்லை. கனம் அங்கத்தினர் புகாரதைத்தான் இப்பொழுது கேட்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : 659 வீடுகள் கட்டுவதற்காக சர்க்கார் உதவி அளித்திருப்பதாக மந்திரியவர்கள் கூறினார்கள். எவ்வளவு பேர்கள் உதவி வேண்டுமென்று மனுச் செய்திருந்தார்கள் ? அவர்களில் எவ்வளவு பேர்களுக்கு கொடுக்கப்பட்டது. யாருக்காவது கொடுக்கப்படாமல் இருந்தால் அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. அதற்கு பிரத்தியேகமாக கேள்வி கேட்டால் நான் சொல்கிறேன்.

SRI P. G. MANICKAM : ஸார், சுமார் 1,460 வீடுகளுக்கு சர்க்கார் ஒவ்வொரு வீட்டிற்கும் 100 ரூபாய் மான்யம் ஒதுக்கியிருந்தார்கள். இப் பொழுது சுமார் 700 வீடுகளே முடிவாயிருக்கின்றன. இன்னும் அநேக மாக சுமார் 800 வீடு கட்டப்படவேண்டியிருக்கின்றன. இந்த ஒவ் வொரு வீடும் கட்ட 100 ரூபாய் மான்யம் தருவதோடு 250 ரூபாய் கடன் கொடுப்பதாயும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இப்பொழுது சமுதாய

21st December 1956]

நல வேலைகள் முடிந்தாய் விட்டது. இனிமேல் வீடுகள் விஷயத்தில் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது. ஜில்லா கலெக்டர்கள் மூலம் வீடுகட்ட ஒழுங்கு செய்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அதைப்பற்றி இனிதான் யோசனை செய்யவேண்டும்.

Regional Transport Officers at Madras

* 391 *Q*.—Sri P. RANGASWAMI REDDIAR : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) the number of Regional Transport Officers at Madras after 1st November 1956; and

(*b*) the number of Tamil Non-Brahmin Officers (other than Scheduled Caste and Backward Class) if any among them?

The Hon. Sri B. PARAMESWARAN : (*a*) There were twelve Regional Transport Officers on 1st November 1956.

(*b*) One.

Sri P. RANGASWAMI REDDIAR : அவர்களில் மலையாளிகள் எத்தனை பேர் ? கன்னடியர்கள் எத்தனை பேர் ? "பாக்வேர்ட்" கிளாஸி லுள்ளவர்கள் எத்தனை பேர் ?

The Hon. Sri B. PARAMESWARAN : மலையாளிகள் நான்கு பேர்கள். ஷெடியூல் காஸ்ட்டிலுள்ளவர்கள் இரண்டு பேர்கள். பிராமணர்கள் இரண்டு பேர்கள். கிருஸ்துவர் ஒருவர். பாக்வேர்ட் கிளாஸஸி லுள்ளவர்கள் ஒருவர்.

Sri P. RANGASWAMI REDDIAR : 1956-ம் வருஷம் நவம்பர் மாதம் **1**-ம் தேதிக்கு முன்பு ஒரு வருஷ காலத்தில் ரீஜனல் டிரான்ஸ் போர்ட் ஆபீஸர்களாக கீழிலிருந்து பிரமோஷன் ஆனவர்கள் எத்தனை பேர் ? அதில் மலையாளிகள் எத்தனை பேர்கள் ? **Direct**-ஆக **Recruit** செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

The Hon. Sri B. PARAMESWARAN : ஜூலை 1953-ல் இருந்து தான் இந்த ஆபீஸர்களை நியமிக்க விதிகள் விதித்து அதன் பிரகாரமே அவர்களை அரசாங்கம் அமர்த்தியிருக்கிறது. **1953**-க்கு முன் அமர்த்திய அதிகாரிகள் எல்லாம் தாற்காலிகமாகவே அமர்த்தப்பட்டு இருந்தார்கள். அன்றும்கூட பப்ளிக் ஸர்வீஸ் கமிஷனைக் கேட்டு, அதன் உத்தரவைப் பெற்றுதான் அவர்கள் உத்தியோகத்தில் அமர்த்தப்பட்டார்கள்.

Sri R. M. PALANIYAPPAN : அவர்களில் ரெட்டியார்கள் எவ்வளவு பேர்கள் என்று சொல்லமுடியுமா ?

The Hon. Sri B. PARAMESWARAN : ரெட்டியார்களே கிடையாது.

Sri P. MUNUSWAMI GOUNDER : May I know what is the main function of the Regional Transport Officers?

The Hon. Sri B. PARAMESWARAN : There are too many functions and I cannot define them now unless a separate question is put.